உ

கடவுள் துணை.

சிவசுப்பிரமணியக்கடவுள்பேரில்

# கதிர்காமமாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூலபுத்தகங்களும் அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ் டுகியார்டு அளவுள்ளவிநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

ഉ

கடவுள் துணை.

# கதிர்காமமாலை.

———(*)———

சீரார்கதிர்காமச் செந்தேன் அறுமுகவன்
பாராருமாலைதன்னைப் பாடவரமேயருள்வாய்
தாரார்குழலுமையாள் தானீன்றதற்பரனே
காரானைமேனிக் கணபதியேகாப்பாமே. (க)

நித்தமுனைத்துதித்து நீணிலத்தோர்கொண்டாட
பத்துலட்சங்கோடிதமிழ்ப் பாடவரமேயருள்வாய்
அத்தனருள்குமரா ஆயன்மருகோனே
கர்த்தனேசெந்தில் கதிர்காமவேலோனே. (உ)

பாலாறுநெய்யாறு பரதேசிக்கன்னமிடு
கோலாகரக்குமராகோவேயுனைத்துதிப்பேன்
வேலாயுதனே விசாகாவிளங்குதண்டைக்
காலாயுதக்கொடியே கதிர்காமவேலோனே. (ங)

வாக்குமனதுமொன்ருய் வண்மையுடனின்பதத்துக்
கேற்குந்தமிழ்ப்பாடவெனக்கு வரமேயருள்வாய்
ஆர்க்கும்பெரியோனே அமரர்சிறைமீட்டோனே
கார்க்கும்பெருமானே கதிர்காமவேலோனே. (ச)

அனுதினமுமுனைநினைந்து அடியேனுமீடேற
உனதுடையமலரப்பதத்தை யுகந்தெனக்குநீதருவாய்
மனதிலேயும்வாக்கிலேயும் வஞ்சகமில்லாதடியேன்
கனவிலேயுநான்மறவேன் கதிர்காமவேலோனே. (ரு)

பொய்யாகவைத்தீர் புன்தலைமேற்பொற்பாதம்
மெய்யாகவைத்தால் வினையகலுங்கண்டாயே
ஐயாமுருகா அன்புவள்ளிபங்கா
கையாலுனைத்தொழுவேன் கதிர்காமவேலோனே. (சா)

வில்லாலடித்த விஜையனுக்குப்பாசுபதம்
வல்லாயுதங்கொடுத்த மயேசுரன்றன்புதல்வா
யெல்லோர்க்கும்நல்லபிராணென்றென்றதெள்ளனவும்
கல்லாச்சுதோமனது கதிர்காமவேலோனே. (சா)

நீயிருக்கத்தெய்வானை நெஞ்சிருக்கவள்ளியம்மை
தாயிருக்கவேறு சலிப்புவருவானேன்
வேயிருக்கநீர்சூழ்ந்த வெண்ணையுண்டமால்மருகா
காயிருக்கத்தென்கோவே கதிர்காமவேலோனே. (அ)

உள்ளாளனுப்பாமல் ஓடிவந்தீர் ஆசையினல்
விள்ளாமல்சும்மா வெறுங்கைமுழமிடுமோ
துள்ளாதேபோம்போம் துடிதுடித்தோடிவந்த
கள்ளாவறியோன் கதிர்காமவேலோனே. (௯)

துள்ளிமயிலேறித் திடிதிடித்துத்தேடிவந்து
வெள்ளிநகைதந்தவர்போல் வேசையுடன்சொல்வானே
அள்ளிகொடுத்தால்சும்மா அளந்தெடுத்தால்கடன்காண்
கள்ளியென்றுசொன்னீர் கதிர்காமவேலோனே. (௰)

உன்தாள் துணையெனவே உறுதியுடன்நம்புமெந்தன்
சிந்தாகுலந்தவிர செல்வமிகத்தந்தருள்வாய்
இந்தாவென்றுடும் சிவன்மகனேதேவர்தொழும்
கந்தாகுமரா கதிர்காமவேலோனே. (௧௧)

என்னுடையகாவல்தனை யிடழியவேலெடுத்தாய்
பண்ணுதமிழ்ப்பாடிப் படிக்கவரமேயருள்வாய்
அன்னநடையவள்காண் அன்புவள்ளிபங்காளா
கன்னற்சொரிமுத்தே கதிர்காமவேலோனே. (௧ )

என்நெஞ்சம்நானும் யிடஞ்சல்படுந்துயரம்
உன்னெஞ்செறிய உனக்குநான்சொன்னதில்லை.
அன்னஞ்சிறுநடையா என்புதெய்வயானைபுகழ்
கன்னல்மொழிவள்ளிபங்கா கதிர்காமவேலோனே. ( )

போதாதோதேவாநீர் பொன்னுமயின்மீதேறி
வாதாகயென்வீட்டில் வந்தால்வழக்குமுண்டோ
நீர்தாமும்யென்னளவும் நிட்ரமெம்செய்தகந்தா
காதாருமோர்சொல்லும் கதிர்காமவேலோனே (௰௪)

மணக்கோலமானதினல் மறந்தீரறியாமல்
யெனக்கோ அவளுமக்கு யிட்டமருந்தின்பிசகோ
பிணக்கோயென்னேடுமக்கு பேசாமலமோடிபண்ண
மணக்கோதான்சொல்லும் கதிர்காமவேலோனே. ()

சுத்தனேஞானச் சுடரேசுடர்விளக்கே
பித்தனர்பேறேபெருமான் மருகோனே
குத்தமேசெய்தாலும் கொண்டுபொறுத்தருள்வாய்
கர்த்தனேயெங்கள் கதிர்காமவேலோனே. (௧௬)

வாணுலுதைத்த மஹாசூரனைவதைத்து
சேனுடுகாத்தருளும் செங்கைவடிவேலோனே
பூணுரம்பூண்டவும்மை பொற்கமலச்சேவடியை
காணுதகண்ணென் கதிர்காமவேலோனே (௧௭)

மிண்டிச்சமர்க்களத்தில் மென்மேலுங்கைகலந்து
மண்டிப்பெருமசுரர் வாணுள்தனைவதைத்து
தெண்டித்தமரர் சிறைமீட்குஞ்சேவகனே
கண்டிவளநாடாளும் கதிர்காமவேலோனே. (௧௮)

ஏட்டிலெழுதவென்று லெழுதத்துலையாதிலங்கை
நாட்டாரறிய நடத்துவதுமுன்புதுமை
கோட்டானைசிங்கம் கொடும்புலிகள் வந்தாலும்
காட்டாதேநீயருள்வாய் கதிர்காமவேலோனே. ()

பட்டுடையும்ஒப்பினையும் பாசாங்குசக்கரமும்
இட்டசமர்க்களமும் இலங்குமுகமாறும்

துட்டரணசூரர்களை துரத்திவடிவேல்விடுத்த
கட்டழகாவாகா கதிர்காமவேலோனே (உய)

செங்கரத்தில்வேலுதவும் சிந்தைதனில்வீற்றிருக்கும்
பங்கப்படுந்துயரம் பாதகத்தைத்தீர்த்தருள்வாய்
மங்கைவள்ளிபாங்காளா மாணிக்கமின்னுதரும்
கங்கைவளநாடா கதிர்காமவேலரனே. (உஉ)

மயிலாடும்மான்மறைகள் வரிப்புலிகள்வானரங்கள்
பயிலாகவாழும் பரமபதநன்னாட்டில்
துயிலாவிளக்கொளிபோல் துலங்குமுகமாறும்
கயிலாசமென்னும் கதிர்காமவேலோனே. (உஉ)

கொண்டீரோமோகமெத்தக் கொங்கைதையல்வாய
உண்டீரோமெத்த உபகாரஞ்செய்தாளோ [மிர்தம்
பெண்டிருமக்கேற்ற பெண்ணிருக்கப்பிள்ளையுந்தான்
கண்டீரோசொல்லும் கதிர்காமவேலோனே. (உ௩)

ஆச்சுதோமாரன் அவள்மேல்விடுங்கணைகள்
தாச்சுதோமோகந் தலைக்குமேலாய்விடுமோ
போச்சுதோயென்வார்த்தை பொய்யாயவள்மீது
காச்சுதோசொல்லும் கதிர்காமவேலோனே. (உ௪)

பூட்டுகிறீராசையின்பம் போதாக்குறைச்சலுக்கு
மூட்டினீர்சண்டை முடிப்பெனக்குத்தந்ததுண்டோ
தீட்டினீர்தேனமிர்தம் செங்கையிலேவைகுந்தம்
காட்டினீர்சும்மா கதிர்காமவேலோனே. (உ௫)

நல்லாதரவுடனே நானுனதுபாதகதி
அல்லாதுவேறுளதோ அஞ்சலெனக்காத்தருள்வாய்
பல்லாயிரங்கோடிப் பணிக்கும்வரமருளக்
கல்லோதானுன்மனது கதிர்காமவேலோனே. (உசு)

படைக்குப்பெரியதொரு பத்துமுடிராவணனை
அடக்கிச்சிரமறுத்த ஆயோன்மருகோனே
சடைக்குப்பெரியதொரு சங்கரனார்பெற்றமைந்தா
கடைக்குப்பதந்தருவாய் கதிர்காமவேலோனே. (உஎ)

ஆசைவலைக்குள் அடியேன்படுந்துயரம்
தேசமெல்லாஞ்சுற்றித் திரிந்தாலுந்தீராதே
நேசமுடன்பாசமற நினைத்தவரமேயருள்வாய்
காசினியோர்போற்றுங் கதிர்காமவேலோனே. (உஅ)

அன்றமரர்கொண்டாட அசுரர்குலம்வேரறுத்து
குன்றுருவவேல்விடுத்த கோழிக்கொடியோனே
இன்றடியேனீடேற வெனக்குவரமேயருள்வாய்
கன்றெறிந்தோன்மால்மருகா கதிர்காமவேலோனே. ( )

அன்னையுநீ தந்தையுநீ யானுனுமைந்தனுக்குப்
பின்னையுலகுதனிற் பேசுவதும்நீயலவோ
முன்னைபுரமெரித்த முக்கண்ணன் றன்புதல்வா
கன்னல்சொரிமுத்தே கதிர்காமவேலோனே. (௩0)

கதிர்காமமாலை

முற்றிற்று.